21.01.15

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாளை பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர், ஜன. 20: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை (ஜன. 22) நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வடக்கு மாதவி சாலை, மகாத்மா காந்தி நகரில் உள்ள மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது தலைமையில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், கடனுதவிகள், வேளாண்மை இடுபொருள்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் குறித்து விவாதிக்கப்படும். கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் விவசாயி சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

### 23-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் 23-ம் தேதி விவசாயிகள் குறை கேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. கடலூர் மாவட்ட விவசாயிகள், தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கையாக அளிக்க வாய்ப்பு வழங்கப்படும். கூட்ட அரங்கில் தங்களது கோரிக்கைகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் காலை 10.30 மணிக்கு தங்களது பெயர் மற்றும் கோரிக்கை அளிக்கவுள்ள துறையின் பெயர் ஆகியவற்றை பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விவசாயிகள் தங்களது கோரிக்கைகளை மனுவாகவும் வழங்கலாம்,

இக்குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்படுவார். இந்த வாய்ப்பை கடலூர் மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

## விவசாயத் தொழிலாளர் சங்கக் கூட்டம்

விருத்தாசலத்தை அடுத்த மேமாத்தூர் கிராமத்தில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்க கிளைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்க வட்டக்குழு உறுப்பினர் கொளஞ்சிநாதன் தலைமை வகித்தார். வட்ட பொருளாளர் ராமானுஜம், மாவட்ட துணைச் செயலர் கோகுலகிறிஸ்டீபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மேமாத்தூர் கிராம ஆதிதிராவிடர் குடியிருப்பில் பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க வேண்டும், 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள அரசு கட்டடத்தை ஆதிதிராவிடர் பகுதியில் அமைக்க வேண்டும், 40 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகட்டி வசித்து வரும் ஏழை, எளிய மக்களுக்கு, இலவச குடியிருப்பு மனைப்பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்க உறுப்பினர்கள் மற்றும் கிராம மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## வீட்டு தோட்டத்தில் மட்டுமே விளையக்கூடிய வசலை கீரை

ஆர்.கே.பேட்டை: வீட்டுத் தோட்டத்தில் மட்டுமே விளையக்கூடியது என்பதால், இதுவரை சந்தைக்கு விற்பனைக்கு வராதது வசலை கீரை. இது, பறிக்க பறிக்க மீண்டும் துளிர்க்கக்கூடிய கொடி வகையைச் சேர்ந்தது.வீட்டுத் தோட்டத்தில், ஈரப்பாங்கான இடத்தில் வளரக்கூடியது வசலை கீரை. கொடியாக படரக்கூடிய இதற்கு, சிறு பந்தல் அமைத்தால், தொடர்ந்து பலன் தரும். இதில், சிவப்பு

மற்றும் பச்சை நிற தண்டு கொண்ட இரண்டு வகை உண்டு. சிறு பூக்களும், கருப்பு நிற கனிகளும் இதில் உண்டு. விதைகள் மூலம் புதிய செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெரும்பாலும், பந்தலுக்கு கீழே முளைக்கும் செடிகள் வேருடன் பறித்து நடவு செய்யப்படுகின்றன. இதன் இலைகள் அதிக சதைப்பற்று கொண்டவை. குறிப்பிட்ட இடைவெளியில் இலைகளை பறிக்க, மீண்டும் புதிய இலைகள் துளிர்க்கும். இதனால், பல ஆண்டுகளுக்கு இந்த செடிகள் பலன் தரக்கூடியவை. தகுந்த பற்று கொம்புகள் இருந்தால், தரையில் இருந்து மொட்டை மாடி வரை கூட இதன் கொடிகள் வளரும். எந்த நேரத்திலும் கிடைக்கக்கூடிய அற்புத கீரை என்பதால், பொதட்டூர்பேட்டை, அம்மையார்குப்பம் உள்ளிட்ட கிராமங்களில், வீடுதோறும் வசலை கொடிகள் கட்டாயம் வளர்க்கப்படுகின்றன. வீட்டுத் தோட்டங்களில் மட்டும் வளர்க்கப்படும் இந்த கீரை, இதுவரை சந்தைக்கு விற்பனைக்கு வந்தது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## <u>தென்னையில் ஊடுபயிராக கோகோ சாகுபடி - சாதிக்கும் கெங்குவார்பட்டி விவசாயி</u>



தேனி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக வறட்சி நிலவியது. இதனால் பெரியகுளம் தாலுகாவில் ஜி.கல்லுப்பட்டி, கெங்குவார்பட்டி கிராமங்களில் அதிக அளவில் தென்னை மரங்கள் நீரின்றி காய்ந்தது. காய்ந்து போன மரங்களை விவசாயிகள் வெட்டி அகற்றினர். இந்நிலையில் கெங்குவார் பட்டியைச் சேர்ந்த விவசாயி காமராஜ் தென்னையில் ஊடுபயிராக கோகோ சாகுபடி செய்து சாதனை படைத்துள்ளார். நான்கு ஆண்டுக்கு முன்பு ஒரு ஏக்கருக்கு 200 மரம் வீதம் 10 ஏக்கர் பரப்பளவில் தென்னை மரங்களுக்குள் ஊடுபயிராக கோகோ நடவு செய்தார். நடவு செய்த மூன்றாவது ஆண்டில்

இருந்து பலன் கிடைக்க துவங்கியது. தொடர்ந்து 40 ஆண்டுகள் வரை பலனை அனுபவிக்கலாம். ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு முழுப்பலனையும் அடையலாம். ஆண்டுதோறும் ஜூன் முதல் நவம்பர் வரையும் நல்ல பலன் கிடைக்கும். மற்ற மாதங்களில் குறைந்த அளவு பலன் கிடைக்கும். பருவமழை துவங்குவதற்கு முன்பே கோகோ செடிகளை கவாத்து செய்யவேண்டும். ஒரு மரத்திற்கு தலா 2 கிலோ காய்கள் கிடைக்கும், தற்போது ஒரு கிலோ காய் ரூ.200 விலை கிடைக்கிறது. ஒரு மரத்திற்கு ஆண்டுக்கு ரூ. 400 வருவாய் கிடைக்கிறது. காயை நொதித்தல் செய்து மூங்கில்கூடையில் போட்டு வாழை இலை கொண்டு மூடி வைக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை மாற்றி வைக்க வேண்டும். ஐந்து நாட்கள் காய வைக்க வேண்டும். நான்கு நாட்களுக்குப் பிறகு விற்பனைக்கு தயாராகிவிடுகிறது. செம்பட்டியில் உள்ள காட்பெரி நிறுவனம் சார்பில் கொள்முதல் செய்கின்றனர். கோகோ பயிர் சாகுபடிக்கு அரசு தோட்டக்கலைத்துறை சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு முதலாம் ஆண்டு, 22 ஆயிரத்து 500 ரூபாய், இரண்டாம் ஆண்டு 9 ஆயிரம் மானியம் தரப்படுகிறது. கன்று உரம் உட்பட இடு பொருட்களாக வழங்குகின்றனர். சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி நடக்கிறது. கோகோ சாகுபடிக்கு கூட்டுறவு சங்கம் மூலம் கடன் கிடைக்கிறது. விவசாயி காமராஜ் கூறியதாவது: கர்நாடகாவில் 1980 ல் கோகோ நடவு செய்யப்பட்டது. 5 ஆண்டுக்கு பிறகு விலை கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் மரங்களைவெட்டி அழித்து விட்டனர். தற்போதுவெளிநாடுகளில் மரங்கள் முதிர்ந்து விட்டதால் உற்பத்தி குறைந்துவிட்டது. ஆனால் கோகோ தேவை அதிகரித்துள்ளது. தற்போதைய விலையை விட கூடுதலாக 300 ரூபாய் வரை விலை கிடைத்தால் சாகுபடி பரப்பளவு கூடுவதற்கு வாய்ப்பு உண்டு. மேலும் கவாத்து செய்யும் போது நிலத்திற்கு நல்ல உரம் கிடைக்கிறது. நிலப்போர்வை யாக பயன்படுவதால், ஈரத்தன்மை பாதுகாக்கப்படுகிறது. நீர் ஆவியாவது தடுக்கப்படுகிறது. இலைகள் மக்கி உரமாக பயன்படுகிறது. தென்னையில் ஊடுபயிராக வாழை, மஞ்சள் சாகுபடி செய்து பார்த்த போது போதிய பலன்

கிடைக்கவில்லை. தற்போது கோகோ சாகுபடி நல்ல பலனைத் தருகிறது, என்றார். இவருடன் பேச 82206 27712. - **முத்துக்காமாட்சி, தேவதானப்பட்டி.**

<u>**சின்ன சின்ன செய்திகள்**</u>



ஏலக்காய் - நாற்றங்கால் பராமரிப்பு :நாற்றங்காலில் தேவைக்கேற்ப தண்ணீர் ஊற்ற வேண்டும். நாற்றங்கால் நோயைக் கட்டுப்படுத்த 0.2 சத காப்பர் ஆக்ஸி குளோரைடு 100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் என்ற அளவில் கலந்து அல்லது 2 சத சூடோமோனாஸ் கரைசலை 100 லிட்டர் தண்ணீர் 2 கிலோ என்ற அளவில் கலந்து தூர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். இலைப்புள்ளி நோய் தென்பட்டால் 0.25 சத டைபோலடான் 100 லிட்டர் தண்ணீரில் 250 கிராம் என்ற அளவில் கலந்து அல்லது 1 சத போர்டோ கலவை அல்லது 2 சத சூடோமோனாஸ் கரைசலை 100 லிட்டர் தண்ணீரில் 2 கிலோ என்ற அளவில் கலந்துதெளிக்கவேண்டும்.

**மிளகு பயிர் பாதுகாப்பு** : சிற்றிலை மற்றும் பில்லோடி ஆகிய நச்சுயிரி நோய் தாக்கிய கொடிகளை அகற்றி அழித்து விட வேண்டும். மெதுவாடல் நோய் அறிகுறி தென்பட்டால் கொடிக்கு ஒருகிலோ வேப்பம்பிண்ணாக்கு இட வேண்டும். மிளகு அறுவடை: மிளகு கொத்தில் ஒன்று அல்லது இரண்டு மிளகு மணிகள் பச்சை நிறத்திலிருந்து ஆரஞ்சு அல்லது சிவப்பு நிறத்திற்கு மாறுவது தான் மிளகு முதிர்ச்சி அடைந்ததற்கு அறிகுறியாகும். மிளகு கொத்திலிருந்து மிளகு மணிகளை சுகாதாரமான முறையில் கை கொண்டு அல்லது மிளகு பிரித்தெடுக்கும் இயந்திரம் மூலம் பிரித்தெடுக்க வேண்டும். மூங்கில் பாய், கான்கிரீட் உலர் களம், பாலிதீன் தார்ப்பாய் போன்ற சுத்தமான மற்றும் சுகாதாரமான பரப்புகளின் மீது மிளகினை உலர்த்த வேண்டும். இதனால் மிளகின்தரத்தினைஉயர்த்தமுடியும்.

**மிளகாய் பராமரிப்பு** : கரிசல் மண் பிரதேசங்களில் 20-25 நாட்களுக்கு ஒருமுறையும், செம்மண் பிரதேசங்களில் 10-15 நாட்களுக்கு ஒருமுறையும் நீர்

பாய்ச்ச வேண்டும். கருகல் மற்றும் பழ அழுகல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு அல்லது 2 கிராம் மான்கோசெப் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.காய் துளைப் பானைக் கட்டுப்படுத்த 2 கிராம் பி.டி.யை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது ஹெச்.என்.பி.பி / எஸ்.என்.பி.பி கரைசலை எக்டருக்கு 500 மிலி தெளிக்க வேண்டும். ஒரு எக்டரில் தெளிக்க 500 லிட்டர் தண்ணீர் போதுமானது. காய் துளைப்பான்களின் ஸ்போடங்டெரா மற்றும் ஹெலிகோவெர்பா அந்துப்பூச்சி நடமாட்டத்தைக் கண்காணிக்க எக்டருக்கு 10 இனக்கவர்ச்சி பொறிகளை அமைக்க வேண்டும். சாறு உறிஞ்சுப் பூச்சிகளின் தாக்குதல் இருந்தால் வெர்டிசீலியம் லெக்கானி ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

**வாழைக்கு GA கரைசல் :** கண்ணாடி இலை பருவத்தில் (அ) குலை தள்ளும் தருணத்தில் GA தெளிப்பதால் குலையின் நீளத்தையும், குலைகளில் உருவாகும் சீப்புகளுக்குள் இடைவெளியும் அதிகரிக்கலாம். குலையில் எல்லா சீப்புகளும் வெளிவந்த பின்பு ஒரு முழம் விட்டு பூ ஒடிக்கலாம். கடைசி சீப்பு வெளிவந்த உடனோ அல்லது பூ ஒடித்த பின்போ குலைகளில் உள்ள பிஞ்சுகளின் மீது GA கரைசலை தெளிப்பதால் பிஞ்சுகள் நீண்டு வளர்கின்றன. ஒரு கிராம் GA பவுடரை 30 மிலி ஸ்பிரிட்டில் கொட்டி கரைத்து, இக்கலவையை 200 லிட்டர் நீரில் கரைத்து அத்துடன் கிரீன் ஆம்பிள் டானிக் 500 மிலி + VOLTA 80 பசை 50 மிலி கலந்துதெளிக்கலாம். GA பவுடர் வடிவில் 1 கிராம் பேக்கில் கிடைக்கிறது. இது நீரில் கரையாது. ஸ்பிரிட்டில் தான் கரையும்.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

# <u>எலுமிச்சை சொறி நோய்</u>



எலுமிச்சை மரங்களைத் தாக்கும் நோய்களில் மிகவும் முக்கியமானது சொறி நோயாகும். இந்நோய் எலுமிச்சை பயிரிடப்படும் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றது. இந்நோய் ஒருவித பாக்டீரியாவினால் ஏற்படுகின்றது.
**நோயின் அறிகுறிகள் :** இலை, கிளை, சிறு கிளைகள், முள், காய் மற்றும் பழங்களிலும் சொறிப்புள்ளிகள் தோன்றும். குச்சிகளில் தோன்றும் சொறிப் புள்ளிகளினால் குச்சிகள் காய்ந்து விடும். காய்களில் தோன்றும் சொறிப் புள்ளிகளைச் சுற்றிலும் மஞ்சள் நிற வளையம் தோன்றும். பழங்களில் தோன்றும் சொறிப் புள்ளிகளில் வெடிப்புகள் தோன்றும். நோயினால் பழங்களின் தோல்பகுதி பாதிப்பிற்கு உள்ளாகின்றன. பழங்களில் சாறின் அளவும் குறைகின்றது. சொறி நோயுற்ற பழங்களின் சந்தை மதிப்பு வெகுவாகக் குறைகின்றது. பழத்திலுள்ள சொறிப்புள்ளிகள் மற்றும் வெடிப்புகள் மற்ற அழுகல் நுண்ணுயிர்கள் உட்புக வழி உண்டாக்குகின்றன. சொறி நோயினை ஏற்படுத்தும் பாக்டீரியா, இலைத்துளைகள் மூலமாகவோ அல்லது பூச்சி அல்லது முட்களினால் ஏற்படும் காயங்கள் மூலமாகவோ, உட்புகுந்து தாக்குதலை துவங்குகின்றது. நோய் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்கு மழைத்துளிகள், காற்று மற்றும் இலைதுளைக்கும் பூச்சிகள் மூலம் பரவுகின்றது.
**கட்டுப்படுத்தும் நுட்பங்கள் :** நோயுற்று கீழே உதிர்ந்து விழுந்து கிடக்கும் இலைகளையும், சிறு குச்சிகளையும் சேகரித்து எரித்துவிட வேண்டும். மரங்கள் சிறப்பாக வளர நன்கு பரிந்துரைக்கப்பட்ட அளவு உரமிட்டு முறையாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பழத் தோட்டங்களில் நோயுற்ற மரங்களிலிருந்து நோயுற்ற சிறு குச்சிகளை வெட்டி தீயிட்டு அழிக்கவும். பின் கவாத்து செய்த உடன் 0.30 சதம் தாமிர ஆக்ஸிகுளோரைடு மருந்து தெளிக்க வேண்டும். இதனை தொடர்ந்து மூன்று முறை ஸ்ட்ரெப்டோசைக்கிளின் 100 பிபிஎம் (100

மிலி கிராம் / 1 லிட்டர் தண்ணீர்) மற்றும் 0.30 சதம் தாமிர ஆக்ஸி குளோரைடு கலந்து ஒருமாத இடைவெளியில் தெளிக்க வேண்டும். மரம் துளிர்விடும் ஒவ்வொரு சமயமும், மரத்தின் அனைத்து பகுதிகளும் நன்றாக நனையுமாறு சூடோமோனஸ் புளுரசன்ஸ் 0.2 சத கரைசல் (2 கிராம் / 1 லிட்டர் தண்ணீர்) தெளித்தல் அவசியம். இவ்வகை பாக்டீரியா நோயைக் கட்டுப்படுத்த சூடோமோனஸ் புளுரசன்ஸ் 0.2 சத கரைசல் (2 கிராம் / 1 லிட்டர் தண்ணீர்) தெளிக்கவும். 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். எலுமிச்சையில் தோன்றும் இலைத்துளைப்பான்கள் இந்நோயைப் பரப்புவதால் அவற்றை பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்து கட்டுப்படுத்துவது அவசியம். வேப்பம் பிண்ணாக்கு (5 விழுக்காடு) கரைசலைத் தெளித்தும் இந்நோயினை பரப்பும் பூச்சிகளையும் கட்டுப்படுத்தலாம். இவ்வாறு திருவில்லிபுத்தூர், பருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் ம.குணசேகர் கேட்டுக் கொள்கிறார்.

## <u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 23ம் தேதி நடக்கிறது. திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும், 23ம் தேதி, காலை 11:30 மணிக்கு, ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.ஆட்சியர் வீர ராகவ ராவ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மைப் பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிகம் உள்ளிட்ட, வேளாண் துறை சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## இயந்திர அறுவடை ஏக்கருக்கு ரூ.2,000 கடந்த ஆண்டை விட ரூ.300 உயர்வு

பொன்னேரி: அறுவடை இயந்திரங்களின் வாடகை கட்டணம், கடந்த ஆண்டை விட, 300 ரூபாய் உயர்ந்து உள்ளதால், விவசாயிகள் விரக்தி அடைந்து உள்ளனர். மீஞ்சூர் ஒன்றியத்தில், சம்பா பருவத்திற்கு நெல் பயிரிட்டிருந்த விவசாயிகள், தற்போது, அறுவடை பணிகளை மேற்கொண்டு உள்ளனர். பணியாட்கள் பற்றாக்குறை, காலவிரயம் ஆகியவற்றை கருதி, இயந்திரங்கள் மூலம் நெல் அறுவடை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு, அறுவடை இயந்திரங்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு, 2,000 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது, கடந்த ஆண்டை விட, 300 ரூபாய் அதிகமாகும். அறுவடை இயந்திரங்களின் வாடகை கட்டணம் உயர்ந்து உள்ளதால், விவசாயிகள் விரக்தி அடைந்து உள்ளனர். இருப்பினும், வேறு வழியின்றி, கூடுதல் கட்டணம் செலுத்தி, விவசாயிகள் அறுவடை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மெதுார், உப்பளம், சின்னகாவணம், தேவராஞ்சேரி உள்ளிட்ட இடங்களில், அறுவடை இயந்திரங்கள் மூலம் அறுவடை பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. இதுகுறித்து, விவசாயிகள் கூறுகையில், 'கடந்த ஆண்டை விட, டீசல் விலை குறைந்துள்ள நிலையிலும், அறுவடை இயந்திரங்களின் வாடகை அதிகரித்து உள்ளது. நெல் விளைச்சலும் கடந்த ஆண்டை விட ஏக்கருக்கு, ஐந்து முதல், 10 மூட்டைகள் குறைவாக உள்ளன' என, விரக்தியுடன் தெரிவித்தனர்.

## மார்க்கெட் கமிட்டியில் ரூ.20 லட்சத்துக்கு வர்த்தகம்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில் நேற்று 20 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றது. கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 300 உளுந்து மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. சேலம், தஞ்சாவூர், திருச்சி மாவட்ட வியாபாரிகள் உளுந்து பயிருக்கு விலை நிர்ணயம் செய்தனர்.

உளுந்து அதிக பட்சம் ரூ.5,615க்கும், குறைந்தபட்சம் ரூ.5,389க்கும் விற்றது. விவசாயிகளிடமிருந்து 16 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு உளுந்து கொள்முதல் செய்யப்பட்டது. இதேபோல் 230 மக்காசோளம் மூட்டைகளை கொண்டு வந்தனர். அதிகபட்சம் ரூ.1,163க்கும், குறைந்த பட்சம் ரூ.1096க்கும் விலை போனது. மொத்தம் 2 லட்சம் ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. மணிலா, கம்பு, ராகி, பச்சப்பயிறு, வரகு போன்ற பயிர்களும் கொள்முதல் செய்யப்பட்டன. நேற்று 277 விவசாயிகளிடமிருந்து 20 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

## <u>விழுப்புரத்தில் 23ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு</u>

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம், வரும் 23ம் தேதி நடக்கிறது. விழுப்புரம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், வரும் 23ம் தேதி காலை 11 மணிக்கு, மாவட்ட விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம் நடக்கிறது. கலெக்டர் சம்பத் தலை மையில் நடக்கவுள்ள கூட்டத்தில், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களது கோரிக்கைகளை மனுவாக அளித்து பயனடைய கேட்டுக் கொள்ளப் படுகின் றனர். இத்தகவலை கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

## <u>முகூர்த்த சீஸன் துவக்கம் வெற்றிலை விலை உயர்வு</u>

வேலாயுதம்பாளையம்: தை மாத முகூர்த்த சீஸன் துவக்கம் மற்றும் கடுமையான பனி பொழிவால், வெற்றிலை விலை உயர துவங்கியுள்ளது கரூர் மாவட்டம் புங்கோடை, சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புபாளையம், புகளூர், தவுட்டுப் பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வெள்ளக் கொடி, கற்பூரி ஆகிய வெற்றிலை பயிரிட்டுள்ளனர். கரூர், திண்டுக்கல், மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, நாமக்கல், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள், வெற்றிலைகளை வாங்கி செல்கின்றனர். கடந்த வாரம் நடந்த ஏலத்தில், 104 கவுளி கொண்ட ஒரு சுமை இளங்கால் வெள்ளக்கொடி

வெற்றிலை, 3,000, முதிகால் வெள்ளக்கொடி வெற்றிலை, 1,000, இளங்கால் கற்பூரி வெற்றிலை, 2,000 , முதிகால் கற்பூரி, 800 ஏலம் போனது. நடப்பு வாரம் நடந்த ஏலத்தில், இளங்கால் வெள்ளக்கொடி ஒரு சுமை, 3.500, முதிகால் வெள்ளக்கொடி ஒரு சுமை, 1,500, இளங்கால் கற்பூரி, 2,500, முதிகால் கற்பூரி, 1,200 ரூபாய்க்கும் ஏலம் போனது. வெற்றிலை உற்பத்தி குறைவு காரணமாகவும், பல்வேறு கோவில்களில் சிறப்பு பூஜைகள் மற்றும் தை மாத முகூர்த்த சீசன் துவங்கியதை முன்னிட்டும், வெற்றிலை விலை உயர்ந்துள்ளது.

## கம்பம் நெல் வயல்களில் இலையுறை அழுகல் நோய்

கம்பம் : கம்பம் பகுதியில் நெல் வயல்களில் இலையுறை அழுகல் நோய் தாக்குதல் காணப்படுகிறது. இந்நோய் விதை மற்றும் காற்றுமூலம் பரவும் தன்மை கொண்டது.கதிர் வெளிவரும் சமயத்தில் கதிரைச் சுற்றி கண்ணாடி இலையின் இலையுறையின் மேல் கருஞ்சிவப்பு புள்ளிகள் தோன்றும். இதனால் இலையுறையை விட்டு கதிர்கள் வெளியே வராது. வெளிவந்த கதிர்களில் மணிகள் நிறம் மாறி பதராகி விடும். கம்பம் உதவி இயக்குனநர் அசோகன் கூறியதாவது: சூடோமோனாஸ் புளோரோசன்ஸ் நுண்ணியிரியை 2 சதவீத செறிவுடன் நடவு செய்த 45 நாட்களிலிருந்து 10 நாட்கள் இடைவெளியில் வயலில் இட வேண்டும். கதிர் இலைப்பருவத்தில் கார்பன்டசீம், எடிபென்பாஸ் அல்லது மேங்கோசெப் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு கார்பன்டசீம் 250 கிராம் அல்லது குளோரோதலோனில் ஒரு கிலோ அல்லது எடிபென்பாஸ் ஒரு லிட்டர் ஏதாவது ஒன்றை தெளிக்கவேண்டும். பெனோமைல் மற்றும் காப்பர் ஆக்சிக்லோரைடேன் மருந்துகளை இலை வழியாக தெளிக்கவேண்டும், என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

<u>விவசாயிகள் குறை தீர்க்க நாளை கூட்டம்</u>

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்க, நாளை (22ம் தேதி) 10.30 மணிக்கு, வடக்குமாதவி சாலை, மகாத்மா காந்தி நகரில் உள்ள மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடக்க உள்ளது. கூட்டத்தில் நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப் படும். விவசாயிகள் பங்கேற்று குறைகளை தெரிவிக்கலாம், என பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.

<u>ரூ.20 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்</u>

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 20 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. ஈரோட்டுக்கு அடுத்ததாக நாமகிரிப்பேட்டையில், மஞ்சள் மண் டிகள் அதிகம் உள்ளது. ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடக்கும்.தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர்.இந்நிலையில், நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 453 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 9,216க்கும், குறைந்த பட்சம், 6,779 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 8,689க்கும், குறைந்த பட்சம், 5,889 ரூபாய்க்கும்

ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 15 ஆயிரத்து, 712க்கும், குறைந்த பட்சம், 6,900 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 20 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## வெள்ளாடு குட்டிகள் இறப்பு தடுப்பு பயிற்சி

நாமக்கல் : "வெள்ளாடு வளர்ப்பு குட்டிகள், இறப்பை தடுத்தல் குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு, வரும், 27ம் தேதி, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல்-மோகனூர் சாலையில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், வேளாண் அறிவியல் நிலையத்தில், பண்ணையாளர் மற்றும் விவசாயிகள் வளர்ப்பில் உள்ள வெள்ளாடு குட்டிகள் இறப்பை தடுத்தல், நோய் வராமல் பாதுகாத்தல் குறித்த, ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, வரும், 27ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது. மேலும், விவரங்களுக்கு, 04286 - 266 345, 266 244 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு, வரும், 26ம் தேதிக்குள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்கு மணிலா பயிர் பாதுகாப்பு பயிற்சி

விருத்தாசலம், :விருத்தாசலம் அடுத்த குப்பநத்தம் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் அட்மா திட்டத்தில் மணிலா பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த பண்ணைப் பள்ளி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராகவன் தலைமை தாங்கி மணிலா பயிரை தாக்கும் பூச்சிகள் பற்றியும் அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கி கூறினார். வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் வெங்கடலட்சுமி மணிலா சாகுபடி தொழில் நுட்பங்கள் விதை நேர்த்தி, உர நிர்வாகம், களை நிர்வாகம், ஊட்டசத்து தெளித்தல், ஊடு பயிர்கள் குறித்து விவசாயிக்கு விளக்கி கூறினார். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் குமரேசன், தேவேந்திரன், உதவி

வேளாண்மை அலுவலர்கள் பாலசந்திரமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். தொழில் நுட்ப மேலாளா உமா மகேஸ்வரி நன்றி கூறினார்.

## <u>நடப்பாண்டு சாகுபடிக்காக கோவை - திருப்பூர் விவசாயிகளுக்கு 2951 டன் தரமான விதை விற்பனை</u>

உடுமலை, : கோவை - திருப்பூர் மாவட்ட விவசாயிகளுக்கு 2951 டன் தரமான விதை விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அதிகாரி தெரிவித்துள்ளார். கோவை விதைச்சான்று உதவி இயக்குனர் டாம்.பி.சைலஸ் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தரமான விதை என்றால் அது தனது பாரம்பரிய குணங்களில் இருந்து சிறிதும் குறையாமல் இருக்க வேண்டும். பிற ரகம் மற்றும் பிற பயிர்கள் கலப்பு இல்லாமலும், பூச்சி, பூஞ்சாணங்களால் தாக்கப்படாமலும் புறத்தூய் மையுடன் இருப்பது அவசியம். தரமான விதை என்பது நிர்ணயிக்கப்பட்ட முளைப்புத் திறன், ஈரப்பதம், இனத்தூய்மை புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் இல்லாமல் இருப்பதால் விவசாயிகள் அதிக விளைச்சலையும், அதிக வருமானத்தையும் ஈட்ட முடியும். குறிப்பாக சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்தும்போது 15 முதல் 20 சதவீதம் அதிக மகசூல் பெற முடியும். நாம் ஒரு பொருள் வாங்கும்போது அப்பொருளுக்கு ஐ.எஸ்.ஐ அல்லது அக்மார்க் முத்திரை உள்ளதா என்று பார்த்து வாங்குகிறோம். இதைப் போலவே விதைத் தரத்திற்கு உத்திரவாதம் தருவது தமிழ்நாடு அரசு விதைச்சான்று துறையால் தரப்படும் சான்றாகும். விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகள் வழங்குகையில் தமிழ்நாடு அரசு விதை சான்றுத்துறை அந்த விதைகளை உற்பத்தி செய்யும் நிலையிலும் விநியோகம் செய்யும் நிலையிலும் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது. நடப்பு ஆண்டில் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நெல், சிறுதானியங்கள், பருத்தி, எண்ணெய் வித்துகள், பயிறு வகைகள் மற்றும் காய்கறிப் பயிர்களில் 5320 ஏக்கர் பரப்பில் தனியார், அரசு, அரசு சார்பு நிறுவனங்களால் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டு உயர் தரமான சான்று பெற்று 2951 மெட்ரிக் டன் அளவிலான

விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறி உள்ளார்.

## <u>மானாவாரியில் பயிரிட பருத்தி ஏற்றது</u>

பழநி, :மானாவாரியில் பருத்தி பயிரிடும் முறை குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். மானாவாரியில் பருத்தி பயிரிட எல்.ஆர்.ஏ-5166, சுமங்கலா, கே-11, எஸ்.வி.பி.ஆர்-2, கே.சி-2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். 45*15 சென்டி மீட்டர் இடைவெளியில் பார்கள் அமைத்து எக்டேருக்கு 15 கிலோ என்ற அளவில் விதைக்க வேண்டும். பஞ்சு நீக்கிய விதையுடன் 3 கிராம் பாலிகோட், கார்பன்டைசிம் 2 கிராம், இமிடர்குளோபரிட் 7 கிராம், சூடா மோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 10 கிராம், அசோபாஸ் 40 கிராம் கலந்து விதைப்பதால் விதைத்த 45வது நாள்வரை சாறு உறிஞ்சும் பூச்சிகளிலிருந்து பயிரினை காத்து ஆரம்பத்தில் நல்பயிர் வளர்ச்சி அடைய முடியும். நுண் ஊட்டச்சத்தாக எக்டேருக்கு சிங்க் சல்பேட் 50 கிலோ அடியுரமாக அளிப்பதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்கிறது. பயிரின் வயது 150 நாட்களுக்குள் இருக்கும்போது, 60 கிலோ தழைச்சத்து இட வேண்டும். 150 நாட்களுக்கு மேல் ஆகும்போது தழைச்சத்து 80 கிலோவிற்கு மேல் இட வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு தழைச்சத்து 120 கிலோ இட வேண்டும். களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோரலின் 2.2 லிட்டர் அல்லது பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். உயிர் உரமாக 2 ஆயிரம் கிராம் அசோஸ்பரில்லத்துடன் 2 ஆயிரம் கிராம் பாஸ்போ பாக்டீரியா இட வேண்டும். அடி உரமாக எக்டேருக்கு 50 கிலோ சிங்க் சல்பேட் அளித்தால் நுண் ஊட்ட சத்து அளிக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ அல்லது பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம் என்று வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## வரும் 23ல் குறைதீர் கூட்டம்

தேனி, : மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 23ம் தேதி நடக்க உள்ளது. கலெக்டர் வெங்கடாசலம் அறிக்கை : தேனி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 23ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு எனது தலைமை யில் நடக்க உள்ளது. எனவே, விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்து பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நெற்பயிரை தொடர்ந்து 'வாழ வைக்குது வாழை'

போடி, : போடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் வாழைக்காய் அமோக விளைச்சல் அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். போடி மற்றும் பாலார் பட்டி, கூழைய னூர், குச்சனூர், டொம்புச்சேரி, மார்க்கையன்கோட்டை உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் அதிகளவு ஒட்டு வாழை களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இவ்வகை வாழைகள் 6 மாத காலத்தில் பலன் தரக்கூடியதாக இருப்பதால், விவசாயிகள் ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர். கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. பருவமழையி' 'கரு'ண', சொட்டு நீர் பாசனத்தால் இம்முறை வாழை அமோக விளைச்சல் கண்டுள்ளது. கடந்த ஆண்டை காட்டிலும் அதிக தார்களை கொண்டு, பழம் திரட்சியாக இருப்பதால் கேரளா விவசாயிகள் அதிகமாக கொள்முதல் செய்து வருகின்றனர். கிலோ ரூ.13 முதல் 18 வரை வரை விற்பனை செய்யப்படுகிறது. பராமரிப்பு, விவசாயக்கூலி உள்ளிட்ட செலவுகள் குறைவால், எதிர்பார்த்ததை விட இம்முறை அதிக லாபம் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். நெல் விளைச்சல் ஒருபுறம் மகிழ்ச்சியை தந்துள்ள நிலையில், வாழை விவசாயமும் கை கொடுப்பதால் விவசாயிகள் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்துள்ளனர். போடி, சின்னமனூர் பகுதியில் உள்ள மொத்த கொள்முதல் வியாபாரிகள்

வாழைத்தார்களை கொள்முதல் செய்து வெளி மாநிலங்களுக்கு பெட்டிகளில் வைத்து லாரிகள் மூலம் அனுப்பி வருகின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>இந்திய மாம்பழங்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம் ஐரோப்பிய யூனியன் முடிவு</u>**



லண்டன், இந்தியாவில் இருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்வதற்கான தடையை கடந்த ஆண்டு மே 1–ந்தேதி முதல் ஐரோப்பிய யூனியன் அமல்படுத்தியது. இந்த தடை இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முடிய அமலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டு இருந்தது. இதனால் இந்தியாவில் இருந்து 28 ஐரோப்பிய நாடுகளுக்கு மாம்பழங்களை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை நீடித்து வந்தது. இந்த நிலையில் சுகாதார கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் சான்றிதழ் அளிக்கும் முறைகளை இந்தியா மேம்படுத்தியதைத் தொடர்ந்து மாம்பழங்களை தங்கள் நாடுகளில் இறக்குமதி செய்வதற்காக விதிக்கப் பட்டிருந்த தடையை ஐரோப்பிய யூனியன் விலக்கிக் கொள்ள தீர்மானித்தது. இதற்கான தீர்மானம் ஓட்டெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இன்னும் ஒரு மாதம் பிடிக்கும் என்று கருதப்படுகிறது. இது முடிவடைந்து விட்டால் இந்திய மாம்பழங்களை ஐரோப்பிய நாடுகள் இறக்குமதி செய்வதில் எந்த தடையும் இருக்காது. இதனால் நடப்பு மாம்பழ பருவத்தில் முன்பு போல் மாம்பழ ஏற்றுமதி தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய யூனியனின் இந்த முடிவை இந்தியாவில் உள்ள இங்கிலாந்து தூதரக அதிகாரி ஜேம்ஸ் பீவன் வரவேற்று உள்ளார். இது இந்திய–இங்கிலாந்து, இந்திய– ஐரோப்பிய நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவை மேம்படுத்தும் என்றும், இதனால்

இந்திய ஏற்றுமதியாளர்களும், இங்கிலாந்து நுகர்வோரும் பெரிதும் பயன் அடைவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

**<u>மடத்துக்குளம் பகுதி தென்னை விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கும் விழா</u>**



மடத்துக்குளம் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இந்த பகுதிகளில் தென்னை,நெல்,வாழை,கரும்பு மக்காச் சோளம்,மற்றும் காய்கறி பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்து வருகின்றனர். தென்னை விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் மாதிரி செயல் விளக்கப் பண்ணை அமைப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு மானிய உரம் வழங்கும் விழா சாமராயப்பட்டியில் நடந்தது. விழாவுக்கு சி.சண்முகவேலு எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். தென்னை வளர்ச்சி வாரிய இயக்குநர் லுங்கார் ஒபேத் முன்னிலை வகித்தார். மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் செயலாளர் ராஜ்குமார் வரவேற்றுப்பேசினார். கூட்டமைப்பின் தலைவர் ஜெயமணி திட்டம் குறித்து பேசும் போது, இத்திட்டத்தில் கலந்து கொள்ளாத விவசாயிகள் இத் திட்டத்தில் கலந்து கொண்டு மானியம் பெறவும், தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் வழங்கப்படும் மற்ற சலுகைகளை பெறவும் மடத்துக்குளம் தென்னை உற்பத்தியாளர் கூட்டமைப்பினை அணுகலாம் என்றார். இதனை தொடர்ந்து இத்திட்டத்தில் இணைந்த அனைத்து விவசாயிகளுக்கும் மானிய உரங்களை சி.சண்முகவேலு எம்.எல்.ஏ. வழங்கினார். விழாவில் விவசாயிகள் மற்றும் விவசாய சங்க தலைவர்கள் கலந்து கொண்டனர்.